உலகத்தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

இதழ் - கூ

திருவள்ளுவராண்டு 2051

05.02.2020



தமிழர் பெருமிதம் பேசும் **தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில்** !

உள்ளே...

ஐ.நா. அறிவியல் கலை அமைப்பு (யுனெஸ்கோ) பிரான்சு - 24.01.2019 மாண்புமிகு அமைச்சர் உரை	03
ஆசிரியர் பகுதி	04
தமிழாராய்ச்சி மன்றமும் தமிழியல் ஆய்வும்	05
பிரெஞ்சு கலைக்கழகம்	07
ஏழு கடலுக்கு அப்பால்	09
ஐரோப்பிய புலம் பெயர்வும்–அகராதி வளமும்–ஒரு நோக்கு	10
தமிழ்த்தூது	11
காஞ்சியும் கம்போடியாவும்	12
தமிழ்நாடு அரசின் தந்தை பெரியார் விருதுப் பட்டியல்	13
அயல்நாடுகளில் அருந்தமிழ்	14
வேதியற் சொற்கள்–சீர் தர–ஒலி பெயர்ப்பு	15
குறிஞ்சிப் பாட்டில் குலவும் மலர்கள்	16
உலகத்தமிழுக்கு வரப்பெற்ற கருத்துரைகள்	17
செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்	19

தொடர்புக்கு

ulagathamizh@gmail.com

ulagathamizh.blogspot.com

Www.twitter.com\ulagathami

Www.facebook.com\ulagathamizh

உலகத்தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

ஐ.நா. அறிவியல் கலை அமைப்பு (யுனெஸ்கோ) உரை பிரான்சு - 24.01.2019

திரு.க.பாண்டியராசன்
மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப்பண்பாட்டுத்துறை
மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க

என்ற இந்தப் பாடல் 1380 ஆண்டுகளாக மண்ணின் மொழியாகிய தமிழ் மொழியில் இத்தொனியிலேயே அன்றாடம் பாடப்பட்டு வருகிறது. தமிழ், ஆபத்தில் இருக்கும் ஒரு மண்ணின் மொழியல்ல!

மண்ணின் மொழிக்கான ஆண்டு கொண்டாடப்படும் இவ்வேளையில், மண்ணின் மொழிகள் ஆபத்தில் இருக்க வேண்டிய நிலை இல்லை என்பதை நான் இங்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மண்ணின் மொழிகளில், பிற பண்பாட்டைச் சிதைக்காமல் வளர்ந்த, பிற மொழிகளையும் உருவாக்கிய ஒரு சில மொழிகள் இவ்வுலகில் உள்ளன. இதில், எங்கள் மொழியாகிய தமிழும் ஒன்று.

தமிழ் மொழி, 32 மொழிகளை உருவாக்கிய பெருமைக்குரியது. *அம் மொழிகளில் பத்து மொழிகள் தற்போது ஆபத்தில் உள்ளன. எடுத்துக்காட்டாக, தோடா மொழி.*

யுனெஸ்கோவால் காலமுறைதோறும் வெளியிடப்பட்டு வரும் உலக மொழிகளின் பட்டியல், பல கருத்துரு சார்ந்த கேள்விகளை வெற்றிகரமாகத் தீர்வு செய்துள்ளது. என் பார்வையில், அந்தப் பட்டியல் மனித இனத்திற்கு ஒரு பெரும் புதையலாக விளங்குகிறது. நான் நினைவுகொள்கிறவாறு, யுனெஸ்கோவின் வாயிலாகத் திரு.வெபர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், பல மொழிகள் ஆய்வு செய்யப்பட்டு, மொழி வரைபடத் தொகுதி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. ***7000 மொழிகளில் 3000 மொழிகள் இன்னும் 10 ஆண்டுகளில் அழிந்துவிடும் என அந்த வரைபடம் காட்டுகிறது.***

இந்தியா, பல்வேறு பண்பாடுகள், ஆன்மிகம், வாய்ப்புகள் நிறைந்த மற்றும் நீண்ட நெடுங்காலப் பொருளாதாரச் சிறப்பைக் கொண்டது. இன்றைய இந்தியா, மண்ணின் மொழிகளைப் பாதுகாக்கும் வழி முறையை உலகிற்குக் காட்டுகிறது.

எங்கள் கணக்கீட்டின்படி இந்தியாவில் 19,569 தாய் மொழிகள் உள்ளன. இதில் 121 மொழிகள் 10,000 க்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு வருகிறது.

கடந்த 5 மக்கள் தொகை கணக்கெடுப்பில் 10,000 மக்களுக்குக் குறைவாகப் பேசப்பட்டு வந்த பல மொழிகள் இப்போது 10,000 க்கும் அதிகமான மக்களால் பேசப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மண்ணின் மொழிகள் சிறப்பாகக் கொண்டாடப்படுவதில்லை. அப்படிக் கொண்டாடப்பட்டால் அவை பெரு மொழிகளாக வளர்ச்சி அடையும். இந்த வாய்ப்பை யுனெஸ்கோ ஏற்படுத்தித் தரக் கேட்டுக் கொள்கிறேன்.

1995 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ தன்னையே கேட்டுக்கொண்ட ஒரு கேள்வியை நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அதன் முதல் அறிக்கையில், ***"மொழிகளின் ஆயுள் மிகப்பெரிய ஆபத்தில் இருக்கிறது"*** *என்று வெளியிட்டிருந்தது.*

வளரும்...

ஆசிரியர் பகுதி

உலகத்தமிழ்
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

கருத்தரங்கமும் கைக்கடிகாரமும்!

பலரோடு கருத்துகளைப் பகிர்ந்து கொள்வது, விரிந்த அறிவுக்கும், அறிவார்ந்த செயலுக்கும் துணை நிற்பதாகும்.

புலவர் தொழிலைப் பற்றி ஒரு திருக்குறள் அமைந்துள்ளது.

உவப்பக் கூடுதலும், உள்ளப் பிரிதலும் ஆகிய இரண்டுமே அடிப்படையாக அமைந்தவை தான் கருத்தரங்கம், பயிலரங்கம் ,பேரவைக்கூட்டம் ,மாநாடு என்ற அமைப்புகளாக அமைந்துள்ளன.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் (குறள் - 394)

மாநாடு முடிந்த பிறகு, விளைவுகளைப் பற்றிய ஆய்வோ, அளவீடோ நாம் செய்வதில்லை.

அறிவியல் துறையில், முந்தையோர் மொழிந்த முடிவுகளை வகுத்தும், பிரித்தும் ஆராய்ந்து அடுத்த முடிவைப் பற்றிய சாரத்தை கருதுகோளாக வைத்துக் கொள்வார்கள்.

"வந்து போவதற்கும், வழிச் செலவுக்கும் அந்த நேரத்திற்குதவும் கட்டுரைகளை படிக்க முடியாமல் போவதும் அப்படியே படித்தாலும் காலத்திற்கேற்ற கருத்தைச் சொல்வதாக எண்ணித் , தான் தனது விளங்காமையை கட்டுரைகளாக எழுதிக் காட்டுவதை நான் பார்க்க முடிகிறது" என்று அறிஞர் பெட்ரண்ட் ரசல் எழுதினார். கருத்தரங்கத்தின் பயன் கைக்கடிகாரம் வாங்கியதுதான் என்று வேடிக்கையாக முடித்திருந்தார்.

ஏன் இரண்டாவது கருத்தரங்கத்தை நடத்தவில்லை ? என்று அறிஞர் மு.வ. - வைக் கேட்டபோது, "முதல் கருத்தரங்கத்திற்கே மதிப்பெண்கள் 100க்கு முப்பதை எட்டவில்லை. இந்த நிலையில், அடுத்த வகுப்புக்கு எப்படி அழைத்துப் போக முடியும்?" என்று கூறினாராம் .

இந்த நிலையில் தான், பயிற்சிக் களம், பயிலரங்கம், அறிவுரைக்கூட்டம், பல்துறை அறிஞர்களின் நெருக்கம் முதலிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன .

முதல்நாள், பதிவிடுதலும், விளக்கேற்றுதலும் என்று தொடங்கி மூன்றாம் நாள் ஆடல் நிகழ்ச்சி, விருந்தோடு கருத்தரங்கம் நிறைவுறும்.

பலன் என்னவென்றால், ஊர் சுற்றிப் பார்ப்பதும், அங்காடிகளுக்கு அலைந்து திரும்புவதுமாக முடிகின்றன.

புலவர்கள் ஒருங்கு சேர்ந்தால், பயின்றதைச் சொல்லி மகிழ்வதும், எதிர்காலத்திற்கு ஏற்ற கருத்துகளை எண்ணுவதற்காகப் பிரிதலும் என்ற திருக்குறள் ஆழ்ந்து சிந்திப்பதற்குரிய அளப்பரிய கருத்துகளை அடக்கியுள்ளது.

தமிழாராய்ச்சி மன்றமும் தமிழியல் ஆராய்ச்சியும்

முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை

இந்திய வரலாறு பண்பாடு பற்றி அறிவதற்குச் சமற்கிருத மொழி மட்டும் போதாது திராவிடவியலும் தேவை என்பதை இம்மாநாடு உணர்த்தியது. அடுத்த நிலையில் என்ன காரணத்தினாலோ இரண்டு ஆண்டுகளுக்கு நடத்தப்பட வேண்டும் என்ற திட்டம் தழுவி 1974 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 4ம் மாநாடு இலங்கையில் நடைபெற்றது. பேராசிரியர் வித்யானந்தன் தலைமையேற்றார். அடுத்த நிலையில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு 6 ஆண்டுகளுக்குப் பிறகு 1981 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் முயற்சியால் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு சங்கத் தமிழ் வளர்த்த மதுரையில் நடைபெற்றது. உலகத் தமிழர்களை ஒன்றிணைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அன்றைய முதல்வர் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கப்படும் என்றார். இதற்கென பத்துக் கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதாகவும் உறுதி அளித்தார்.

ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மன்றமும் மலேசியா அரசும் இணைந்து டத்தோ சாமிவேலு முயற்சியால் மீண்டும் மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றது. 7வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1969 ஆம் ஆண்டு மோரீசு நாட்டில் நடைபெற்றது. அமைச்சர் ஆறுமுகம் பரசுராமன் மாநாடு சிறக்க ஏற்பாடுகள் செய்தார்.

8ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1995 ஆம் ஆண்டு திங்களில் தமிழகத்தில் நெற்களஞ்சியமாம் தஞ்சாவூரில் நடைபெற்றது. அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி தலைவர் சப்பானியத் தமிழறிஞர் நெபுரு கரோசிமா தலைமையில் அப்போதைய முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதா இணைந்து நடத்தினார்.

அன்று கருத்தரங்குகளாகத் தொடங்கப் பெற்றவை இன்று மாநாடுகளாக உருவாகி உலகளாவிய நிலையில் திராவிடவியல் தமிழியல் ஆராய்ச்சிக்குப் பல முன்னோட்ட முயற்சிகளை மேற்கொண்டாலும் உலகளாவிய நிலையில் திராவிடவியல் தமிழியல் ஆராய்ச்சி வளரும் முறைத்தான் இன்று அமையவில்லை என்பதே உண்மை. இது அமைவதற்கு நாம் செய்ய வேண்டிய பெரும் கடமைகள் இன்று நம் முன் நிற்கின்றன. உலகத் தமிழறிஞர்களின் பாரம்பரியம் போய்விடுமோ என்ற பயம் நம்மைச் சூழ்ந்து இருக்கின்றது.

பத்தாம் உலகத்தமிழாராய்ச்சி மாநாடு சிகாகோவில் அண்மையில் நடைபெற்றபோது, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையமைச்சர் க.பாண்டியராசன் மற்றும் அறிஞர்கள் குழுவினர் கலந்து கொண்டனர்.

இத்தனை மாநாடுகளையும் நம் வளர்ச்சியாக எடுத்து கொண்டு இனி தமிழகத்திலும் இந்தியாவிலும் உலக அளவிலும் திராவிடவியல் தமிழியல் தமிழ் ஆராய்ச்சி போன்றவற்றை திட்டமிட்டு எவ்வாறு பரப்புவது என்பது பற்றி சிந்திப்பது காலத்தின் கட்டாயம்.

வளரும்...



உலக தமிழ் மாநாடுகள்...

	நடந்த இடம்	நாடு	ஆண்டு
முதல் மாநாடு	கோலாலம்பூர்	மலேசியா	1966
இரண்டாம் மாநாடு	சென்னை	இந்தியா	1968
மூன்றாம் மாநாடு	பாரிஸ்	பிரான்ஸ்	1970
நான்காம் மாநாடு	யாழ்ப்பாணம்	இலங்கை	1974
ஐந்தாம் மாநாடு	மதுரை	இந்தியா	1981

	நடந்த இடம்	நாடு	ஆண்டு
ஆறாம் மாநாடு	கோலாலம்பூர்	மலேசியா	1987
ஏழாம் மாநாடு	போர்ட் லூயிஸ்	மொரிசியஸ்	1989
எட்டாம் மாநாடு	தஞ்சாவூர்	இந்தியா	1995
ஒன்பதாம் மாநாடு	கோலாலம்பூர்	மலேசியா	2015
பத்தாம் மாநாடு	சிகாகோ	அமெரிக்கா	2019

பிரெஞ்சு கலைக்கழகம்

முனைவர் ந.அருள்,
இயக்குநர்,
மொழிபெயர்ப்புத்துறை, தலைமைச் செயலகம்

ஆமேல் நிறுவனத்தில், காண்டே அருங்காட்சியகத்தின் நூலகமும், ஆவணக் காப்பகமும் உள்ளன. அங்கு ஆமேல் அரசால் சேகரிக்கப்பட்ட விலைமதிப்பில்லா எழுத்துப்படிகளும் ஆவணங்களும் உள்ளன. புத்தகங்களும் வரலாற்றுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட இந்நூலகத்தில் இன்று ஏறத்தாழ 60,000 தொகுதிகளும், 8,000 வரைபடங்கள் மற்றும் திட்டங்களும், 81,000 கடிதங்களும் உள்ளன.

அப்பேதியா அரண்மனை – ஆய்வுக்கூடம் (ஆண்டோனி டீ அப்பேதி நிறுவனம்)

பாஸ்கியூ (Basque) நாட்டில், ஹெந்தாயே (Hendaye) பகுதிக்கு மேலே, டியூக்ஸ்-ஜூமாக்ஸ் (Deux-Jumeaux) பாறைக்கு எதிர்ப்புறமுள்ள வனப் பகுதியில், பெருங்கடலைப் பார்த்த வண்ணம் நிற்கும், அப்பேதியா அரண்மனை – ஆய்வுக்கூடமானது, அதனை உருவாக்கிய அனைத்திலும் முன்னோடியான கல்வியாளர், புவியியல் ஆய்வாளர், வானியல் ஆய்வாளர், மொழிவாணர் மற்றும் இனவியலாளர் ஆண்டோனி டீ அப்பேதி (1810-1897)-யைப் போன்றே பன்முகங்களைக் கொண்டுள்ளது. 1864 மற்றும் 1884ஆம் ஆண்டுகளுக்கிடையில், யூகீன் வையிலட் லீ டக் (Eugene Viollet le Duc) என்பவர் இந்தக் கோட்டையைக் கட்டினார்.

அவரின் அனைத்துப் படைப்புகளுள், அப்பேதியா, உண்மையில் தனிச் சிறப்பான மற்றும் முழுமையான படைப்பாகும். நியோ-கோதிக் (neo-gothic) கட்டடக்கலை வடிவில் கட்டப்பட்ட இக்கோட்டை, இடைக்கால அரண்மனைகளின் தாக்கத்தைப் பெற்றுள்ளது. இதன் உள் அலங்காரத்தில், கட்டடக்கலை வல்லுநரின் முத்திரை பதிக்கப்பட்டுள்ளது. 1895ஆம் ஆண்டில், அறிவியல் நிறுவனத்திற்கு மொத்த இடத்தையும் நன்கொடையாக அளித்தவரின் வாழ்க்கை மற்றும் பண்பாட்டு குறிப்பையும் இது கொண்டுள்ளது.

இக்கோட்டையின் வடபுறத்தில் அரிதான வானியல் ஆய்வுக்கூடம் அமைந்துள்ளது. பதின்ம அளவீடு வட்டத்துடன் கூடிய தீர்க்கரேகைக் கருவி மிகவும் இவ்விடத்திற்கு ஒரு தனித்துவமிக்க பரிமாணத்தை அளிக்கிறது.

ரே-செஸ்ரெட் கோட்டை (காடின் டீ லேபினே நிறுவனம்) (Ry-Chazerat Chateau (Godin de Lepinay Foundation)

ஜோர்னெட் மற்றும் மாண்ட்மாரில்லன் (Journer and Montmorillon) நகராட்சிகளில் பொய்டோ (Poi Tou) கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள 1,100 ஹெக்டேர் பரப்பளவிலான ரே-செஸ்ரெட் பண்ணையைச் சுற்றி ஒரு சிறிய கோட்டை அமைந்துள்ளது. பாதுகாப்பு அரண்களுடன் கூடிய இக்கோட்டை மெல்லக் மெல்ல குடியிருப்புப் பகுதியாக மாறிவருவதற்கான சான்றுகள் புலப்படுகின்றன. இக்கட்டடத்தின் தரம், வெவ்வேறு காலத்தைச் சார்ந்த கட்டுமானப் பணிகளை வெளிப்படுத்துகிறது.

மேலும், 19ஆம் நூற்றாண்டின் முடிவு வரையில் இக்கட்டடத்தில் யாதொரு மாற்றமும் புலப்படவில்லை. அடோல்ஃபி காடின் டீ லிபினே (Adolphe Godin de Lepinay) 1897ஆம் ஆண்டில், அறிவியல் நிறுவனத்திற்கு இதனை வழங்கினார்.

சூயஸ் கால்வாய்க்கொரு பெர்டிணாண்ட் டீ லெசெப்ஸ் போன்று பனாமா கால்வாய்க்கான அறிவார்ந்த பொறியாளர் அடோல்ஃபி காடின் டீ லிபினே ஆவார். வேளாண்மை மற்றும் பயிர் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு, அறிவியல் நிறுவனத்தின் உறுப்பினர்கள் சில காலத்திற்கு இக்கோட்டையிலேயே வசிக்க வேண்டுமென்பது இவரின் பேரவா ஆகும்.

லாஞ்சியேஸ் கோட்டை (ஜாக்வேஸ் சிக்பிரைட் நிறுவனம்)
Langeais Castle (Jacques Siegfried Foundation)

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், ஆஞ்ஜோவில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க நபர்களுள் ஒருவரான பால் நேரா *(Foulque Nerra)* என்பவரால் லாஞ்சியாசின் பாறைகளின் மீது கட்டப்பட்ட கோட்டை, பின்னாளில் வலிமையான சுவர்களைக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டது.

நூறாண்டு காலப் போரின்போது, இக்கோட்டை அழிக்கப்பட்டது. இக்கோட்டையில் எஞ்சிய பாகங்களைக் கொண்டு, 15ஆம் நூற்றாண்டில் இக்கோட்டையைப் புதுப்பித்த லூயிஸ் *XI*-க்கு நன்றி. அவரின் மகன் சார்லஸ் *VIII, 1491*ஆம் ஆண்டு, அங்கு ஆனி டீ பிரிடாக்னே-வை திருமணம் செய்து கொண்டார். கோட்டையின் வெளிப்புறத்தில் மீண்டும் அமைக்கப்பட்ட வரைபாலம், அக்கோட்டைக்குக் குறிப்பிடத்தக்கதொரு தோற்றத்தை அளிக்கிறது. கோட்டையின் உட்புறப்பகுதி, அதன் பங்கிற்கு, காண்போர்க்குப் புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

பிரான்சு நகரில் *(10*ஆம் நூற்றாண்டு) மீதமுள்ள பழங்காலச் சதுரக் கல் கோட்டையின் இடிபாடுகளினால் உருவாக்கப்பட்ட தோட்டம் ஒன்று அங்குள்ளது. லூயிஸ் *XIII* ஆம் அரசரின் காலம் வரையில், அரசர்களின் உடைமையாக இருந்த இக்கோட்டை, பின்பு, விற்கப்பட்டு அதன்பின்னர்ப் பலரின் கைகளுக்கு மாறியது. *1886*ஆம் ஆண்டு, தொழிலதிபர் ஜாக்வேஸ் சிக்பிரைடு இக்கோட்டையை விலைக்கு வாங்கினார். *15*ஆம் நூற்றாண்டின் இறுதியில், தேவ இல்லம் வடிவில் இவர் இதனை மாற்றியமைத்தார். *1904*ஆம் ஆண்டு, பிரான்சு நிறுவனத்திற்கு இவர் இதனை நன்கொடையாக அளித்தார்.

டோஸ்னே-தியர்ஸ் நிறுவனம் –தியர்ஸ் நூலகம்
Dosne-Thiers Foundation-Theirs Library

பாரீஸ் நகரின் *9*-ஆவது மாவட்டமான புனித ஜார்ஜ் இடத்தில் அமைந்துள்ள டோஸ்னே-தியர்ஸ் மாளிகை,

அடோல்ஃப் தியர்ஸ் மற்றும் அவரின் மனைவி எலிஸ் டோஸ்னே குடியிருந்த மாளிகையாகும்.

வளரும்...

ஏழு கடலுக்கு அப்பால்

ஆத்திசூடி | ATTISUDI | آتي سودي | 阿媞邱立 |

| ആത്തി ചൂടി | आत्तिचूड़ी | ఆత్తిచూడి | ಆಭೂಡಿ

ஐயம் இட்டு, உண்

Share Before Eating

طعم الجائع ثم كل

進食前 分享食物

പങ്കിട്ടു കഴിക്കുക

भीख मांगना लज्जाजनक है |

కోరువారికి ఇచ్చిన తరువాత భుజించు

ಕೋರುವವರಿಗೆ ಕೊಟ್ಟದನಂತರ ಊಟಮಾಡು

தமிழின் எதிர்காலம்...

''பிற மொழிகளின் ஆதிக்கத்தால், தமிழ் அழிந்துவிடுமோ என்கிற அச்சம் தமிழர்களிடம் இருக்கிறது. உங்களுடைய பல்வேறு மொழி அனுபவங்களில் நீங்கள் தமிழின் எதிர்காலத்தை எப்படிக் கணிக்கிறீர்கள்?''

''உங்களுடைய பயம் அவசியமானதுதான். எந்த ஒரு மொழியைப் பேசுபவர்களுக்கும் இந்த அச்சமும் அக்கறையும் அவசியம். ஆனால், தமிழின் எதிர்காலம் மிகச் சிறப்பாகவே இருக்கும் என நினைக்கிறேன். ஏனென்றால், இது மக்களின் பயன்பாட்டில் இருக்கும் மொழி. சம்ற்கிருதம் போன்றோ, இலத்தீன் போன்றோ வெறும் நூலகங்களில் உயிர் வாழும் மொழி அல்ல தமிழ். கிட்டத்தட்ட 7 கோடிப் பேர் அன்றாட வாழ்வில் பேசிக்கொண்டு இருக்கும் மொழி. பிற மொழிக் கலப்பு என்பது ஒரு மொழியின் நீண்ட பயணத்தில் அவ்வப்போது நிகழக் கூடியதுதான். ஆகையால், தமிழின் எதிர்காலம் சிறப்பாகவே இருக்கும். ஆனால், தாய்மொழியை ஒரு சமூகம் இரண்டாம் பட்சமாகக் கருதுவது மிக ஆபத்தான போக்காக அமைந்துவிடும்.''

- டேவிட் சுல்மன்

" இந்து தமிழ் " நடுப்பக்க ஆசிரியர்
சமஸ் கண்ட நேர்காணல்

ஐரோப்பியப் புலம் பெயர்வும் - அகராதி வளமும் - ஒரு நோக்கு

'கலைமணி' சா ஞானா பியாற்றிஸ்
பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம், பாரிசு

உலகில் புலம்பெயர்வு என்பது தவிர்க்க ஒண்ணாததாக நாளும் நடைபெறுகிறது. ஆதிகாலம் தொட்டே புலம்பெயர்வுகள் இடம்பெற்றுள்ளன. இதில் ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வு ஏறத்தாழ நான்கு பத்தாண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்து வருகிறது. தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். தாம் வாழும் நாடுகளில் தங்கள் இனத்தின் அடையாளங்களான மொழியையும் பண்பாட்டையும் பேணும் ஆக்கங்களையும் இலக்கியங்களையும் படைப்பதோடு அவற்றைத் தம் வருங்காலத் தலைமுறையினருக்கும் முன்னெடுத்துச் செல்லும் பணியிலும் முனைப்புடன் செயற்படுகின்றனர்.

தமது மொழி, இலக்கியம், இலக்கணம், அகராதிகள், இசை, நடனம், நாடகம், கவிதை போன்றவற்றைப் படைப்பதில் எழுச்சியோடு ஈடுபட்டுள்ளனர். இவ்வகையில் அமைந்த அகராதித் தொகுப்பு பற்றிய வேறுபட்ட நோக்கினை இக்கட்டுரை இயம்புகிறது.

ஈழத்தமிழர் புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகள் எனப் பார்த்தால் பிரான்சு, செருமனி, சுவிட்சர்லாந்து, நோர்வே, டென்மார்க், சுவீடன், பின்லாந்து,

நெதர்லாந்து, இத்தாலி போன்றவை முக்கிய நாடுகளாக உள்ளன. இந்நாடுகளுக்கு ஆரம்பக் காலங்களில் தொழில் தேடும் நிலையில் மேம்படவும் முற்பட்டனர். புலம்பெயர்ந்த மக்கள் பின்னர் இலங்கைச் சிக்கலால் பெருமளவில் புலம் பெயர்ந்தனர்.

இவ்வாறாகப் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கு அந்நாடுகளின் மொழிகளும், அந்நாடுகளின் தட்பவெப்பப் பண்பாட்டு சூழல்கள் இடர் தருவன. இந்நிலையில் அவர்களுக்குக் கையேடாக இருந்த இருமொழி அகராதிகளும் கிடைப்பதற்கு அரிதானவையாக, கடினமாகச் சொல்லாட்சிகளை உடையதாகவும் வடமொழிச்சொற்கள் அதிகம் காணப்படுவதாகவும் உள்ள நிலையில் புலம்பெயர்ந்த மக்களுக்கு உடனடிப் பயனுடையவாக அமையவில்லை. அன்றாட பயன்பாட்டு சொற்களும் உணவு, மருத்துவம் நோய்கள் தொடர்பான சொற்களும் அவர்களுக்குப் பெரிதும் வேண்டப்பட்டன. உடனடித் தேவையாகவும் பயன்பட இவ்வாறான சூழ்நிலையில் தான் புலம்பெயர் நாடுகளில் தமிழ் இருமொழி அகராதிகள் தோன்றலாயின.

ஐரோப்பிய நாடுகளும் தமிழர்களின் தொகையும்

பிரித்தானியா -132.000 - 200.000 பேர்

பிரான்சு - 156.000 பேர்

செருமனி - 60.000 பேர்

சுவிசு - 50.000 பேர்

இத்தாலி - 25.000 பேர்

நெதர்லாந்து - 12,696 பேர்

நோர்வே - 13,772 பேர்

டென்மார்க் - 13,000 பேர்

சுவீடன் - 6,733 பேர்

ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாட்டின் மொழியைக் கற்கவேண்டும் என்பதற்காக அந்நாட்டின் மொழியையும் - தமிழ் மொழியையும் இணைத்த இருமொழி அகராதிகள் உருவாக்கியுள்ளனர்.

வளரும்...

தமிழ்த்தூது

தனிநாயகம் அடிகள்

ஜப்பானிய மொழி திராவிட மொழிகளுடன் தொடர்புடைய மொழி யன்று; ஆயினும், தமிழைப் போல ஒட்டு நிலை வகுப்பினைச் சார்ந்தது. ஜப்பானியச் செய்யுட்களில், இறைச்சி போன்ற சில பண்புகள் உள. நம் சங்க இலக்கிய அகப் பாடல்களின் உரையாசிரியர், அப்பாடல்களுக்குக் கொளு எழுதியிருப்பது போல, ஜப்பானியப் பாடல்களுக்கும், அந்நாட்டுப் புலவர் கொளு எழுதியுள்ளனர். சிறப்பாக, ஜப்பானிய இலக்கியத்தில் தங்கா எனப்படும் செய்யுள் முப்பத்தோரசைகளைப் பேரெல்லையாகக் கொண்டு, நம் குறுந்தொகைச் செய்யுட்களைப் போல, கருத்திலும் கொளுவிலும் இனிது விளங்குகின்றது

ஜப்பானியர் இயற்கையின் எழிலில் பெரிதும் ஈடுபட்டு வளர்பவர். மலர்களைச் செப்பில் ஒழுங்குபடுத்தி வைப்பதில், அவர் தம் பெண்மணிகளுக்குச் சிறப்பான பயிற்சி அளித்து வருகின்றனர். ஆயினும், ஹாவாய்த் தீவுகளில், மலர்களையும் மாலைகளையும் இன்னும் சிறக்கப் பேணுகின் றனர். ஹாவாய்த் தீவுகளுக்கு யான் சென்ற பொழுது, சங்க இலக்கியக் காலத்தின் நினைவு என்னையறியாமலே எனக்குத் தோன்றிற்று.

ஏனெனில், அங்குத் துறைமுகத்திற்கு வந்தவர் அனைவரும், கண்ணியும் மாலையும், தாரும், கோதையும் அணிந்தே வந்தனர்; விருந்தாக வந்தவர்க்கு மாலைகளைச் சூட்டினர். வழியனுப்புவோர்க்கும் மாலைகளைச் சூட்டி விடையளித்தனர்; பாடினர்; அலோஹா என்னும் ஹாவாய் இசையினைப் பண்ணுடன் இசைத்தனர். சிலர் தழையுடைகளை அணிந்து வந்திருந்தனர். இப்பெண்டிரும் ஆடவரும் சங்க காலத் தமிழ் மக்களைப் போல எனக்குத் தோன்றினர் என்பதில் சிறிதேனும் உயர்வு நவிற்சியின்று.

ஹாவாய்த் தீவில், விண்ணும் மண்ணும் எழில் படைத்திருக்கின்றன. தெளிவான நீல வானம், நிலத்தைச் சூழ்ந்த பசுமையான ஒலிகடல் நீர், பறவைகள், பூக்கள், மரஞ்செடிகள், இவை யாவும், நான் கண்ட வேறு ஊர்களில் இல்லா நிறத்தையும் மணத்தையும் படைத்தனவாய் இருந்தன. என் உலகச் செலவில், நான் கண்ட நாடுகளில், ஹாவாய்த் தீவுகளே எழிலிற் சிறந்தவை. இங்குள்ள தட்ப வெப்ப நிலைகள் அஞ்சத்தக்கன அல்ல; என்றும் உடல் நலத்துக்கு உறு துணையானவைகளே.

பசிபிக்குப் பெருங்கடலின் நடுவிலிருக்கும் இத்தீவுகள், கீழ்த்திசை நாடுகளையும், மேற்றிசை நாடுகளையும் இணைக்கும் பாலமாய் விளங்குகின்றன. ஹாவாய்த்தீவில் நான் தங்கிய போது, அங்குக் கீழ்த்திசை மேற்றிசைத் தத்துவப் பேரறிஞர் மாநாடு நிகழ்ந்தது. இத்தகைய பேரவையைக் கூட்டுவதற்கு இதைவிடப் பொருத்தமான இடத்தைத் தெரிந்தெடுப்பது அரிது.

ஹாவாய்த் தீவுகளிலும், பொதுவாகப் பசிபிக்குப் பெருங்கடலின் தீவுகளிலும், நம் சங்க காலப் பழக்க வழக்கங்களிற்சில இடம் பெறுவது தோன்றுகின்றது. மலர்களை அகவொழுக்கத்திற்கும் புறவொழுக்கத்திற்கும் அறிகுறிகளாகக் கையாண்டு வருகின்றனர். இந் நாட்டவர், முற்காலத்தில், பெரும்பாலும் இந்திய நாடுகளுடன் தொடர்புடையவராகவே இருந்திருப்பர் போலும்! இவர்களின் வரலாற்றை மேலும் அறிய விரும்புபவர், ஆசிரியர் பீற்றர் பக்கு (*Peter Buck* என்பவர் எழுதிய) *Vikings of the Sunrise* என்னும் நூலைப் படித்து அறிக.

வளரும்...

காஞ்சியும் கம்போடியாவும் ...



- காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவில் போலவே, அங்கோர்வாட் கோயிலும் மூன்று அடுக்குகளாகப் பிரமிட் வடிவில் கட்டப்பட்டு இருக்கிறது.
- காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவில் என்று இப்போது அழைக்கப்பட்டாலும் இந்தக் கோவில் 'பரமேசுவர விண்ண கரம்' என்ற பெயரைக் கொண்டே விளங்கியது. அதாவது, 'விஷ்ணுவின் நகரம்' என்று இதைக் கொள்ளலாம்.
- அங்கோர்வாட் என்று அழைக்கப்படும் கோயிலின் ஆதி காலப்பெயர் 'விஷ்ணு லோக்' என்பதாகும். விஷ்ணுவின் உலகம் என்பதைக் குறிப்பதற்காக இந்தப் பெயர் வைக்கப்பட்டது.
- விஷ்ணுவுக்காக அமைக்கப்பட்ட இரு கோயில்களும் ஏறக்குறைய ஒரே மாதிரியான பெயரைத் தாங்கி இருப்பது நோக்கத்தக்கது.



தமிழ்நாடு அரசின் தந்தை பெரியார் விருதுப் பட்டியல்

தமிழ்நாட்டில் சமூக நீதி கிடைக்கப் பாடுபட்டவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு தந்தை பெரியார் சமூக நீதி விருது என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.

(அரசாணை (நிலை) எண்.53, பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் : 10.11.1994)

வ. எண்	ஆண்டு	விருதாளர்கள்
1	1995	திரு.கி.வீரமணி
2	1996	திருவாரூர் திரு.கே.தங்கராசு
3	1997	திரு.தவமணி ராஜன்
4	1998	நாத்திகம் திரு.ராமசாமி
5	1999	திரு.ஏ.நடராஜன் (நன்னிலம்)
6	2000	திரு.எம்.செல்வேந்திரன்
7	2001	திரு.புலமைப்பித்தன்
8	2002	திரு.ஜெகவீரபாண்டியன்
9	2003	திரு.துரை கோவிந்தராஜ்
10	2004	நீதியரசர் பி.வேணுகோபால்
11	2006	இனமுரசு எஸ்.சத்தியராஜ்
12	2007	திரு.இரா.சு.கவிதைப்பித்தன்
13	2008	இயக்கநர் திரு.ஞானராஜசேகரன், இ.ஆ.ப.,
14	2009	திரு.நக்கீரன் கோபால்
15	2010	திரு.கோ.சாமிதுரை
16	2011	டாக்டர் திருமதி.விசாலாட்சி நெடுஞ்செழியன்
17	2012	முனைவர் கோ.சமரசம்
18	2013	திருமதி ஈ.வெ.கிசுலோச்சனா சம்பத்
19	2014	டாக்டர் தாவுஜி குப்தா
20	2015	திரு.வி.ஆர்.வேங்கன்
21	2016	திரு.பண்ருட்டி ச.இராமச்சந்திரன்
22	2018	திரு.சி.பொன்னையன்
23	2019	செஞ்சி ந.இராமச்சந்திரன்

அயல் நாடுகளில் அருந்தமிழ்

திரு.பா.வளன் அரசு,
பாளையங்கோட்டை

தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்"

என்று பாட்டுக்கொரு புலவர் பாரதியார் பறைசாற்றியுள்ள கொள்கை இன்று பாரெங்கும் முறையாக முழங்கவும் சீரோங்கிச் செயலாகிச் சிறந்தொளிரவும் காண்கிறோம். ஐரோப்பியர் தொடர்பால் பைந்தமிழ் பல்வேறு வளங்களைப் பெற்று நானிலமெங்கும் விரைந்து பரவியுள்ளது. 1730-ஆம் ஆண்டில் வீரமாமுனிவர் திருக்குறளை இலத்தீன் மொழியில் பெயர்த்தளித்த காலந்தொட்டு ஞாலத்து மொழிகள் பலவற்றில் குறள் அறமும் தமிழ் மணமும் கமழத் தொடங்கியதாக அறிகிறோம்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்னும் பாராட்டு உண்மை ; வெறும் புகழ்ச்சியில்லை, குறளைப் பறையறைந்து குமரித் தமிழ் குவலய மெங்கும் தழைத்தோங்கிட உழைத்து வரும் பெரியோர் பலர். தமிழ் கூறும் நல்லுலகம் குறுகிய வட்டமாக அல்லாமல் பெருகிய பரப்பாக விளங்குவதும் உலகத் தமிழ் மாநாடுகள் ஈராண்டுக் கொருமுறை உலகில் பல்வேறு இடங்களில் கூடுதலும் தமிழின் வளர்ச்சியைப் புலனாக்குபவை. வட வேங்கடம் தென் குமரி என்னும் எல்லைக்கு அப்பாலும் வண்டமிழ் வளர்ந்து வருவது பெருமிதம் தருவதாகும் வானொலி வாயிலாகவும் பல்கலைக் கழகங்கள் வழியாகவும் ஏடுகள் மூலமாகவும் தூதர் தம் தொடர்பாலும் தரணியெங்கும் தமிழ் சிறப்புடன் திகழ்கிறது.

அமெரிக்கா

அமெரிக்காவில் சிக்காகோ, பென்சில்வேனியா, கலிபோர்னியா ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களிலும் தமிழ் பயிலும், வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. "பல்கலைச் செல்வர்" தெ.பொ.மீ. அவர்கள் சிக்காகோவில் தமிழ்ப் படிப்பைத் தொடங்கி வைத்து வந்தார். பென்சில்வேனியாவில் பேராசிரியர் லீ.இலிக்கார் அவர்களும் கலிபோர்னியாவில் பேராசிரியர் கும்பார்சு அவர்களும் தமிழ்த் துறையைப் பேணிக் கண்காணித்து வருகின்றனர்.

திருவனந்தபுரம் பல்கலைக் கழக மொழியியற் பேராசிரியர் கலைமுனைவர் வி.ஐ.சுப்பிரமணியன் அவர்கள் வடசேரி வழக்குத் தமிழ் குறித்து எழுதிய ஆய்வுக் கட்டுரைக்கு இந்தியனா பல்கலைக் கழகத்தினர் 'கலைமுனைவர்' பட்டமளித்துப் போற்றினர். சிலப்பதிகாரமும் சங்க இலக்கியப் பாடல்கள் பலவும் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தாரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சிப்பட்டம் பெறும் ஆர்வத்துடன் பேராசிரியர் பர்டன் "திருப்பதி கோயில்" குறித்தும், கார்க்கிராவ் "தி.மு.க." பற்றியும், யூ.சின்.இர்சிக்கு "நீதிக்கட்சி" நிலையையும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். நியூயார்க்கைச் சார்ந்த ஆலன் தேனியல் 1965-ஆம் ஆண்டு சிலப்பதிகாரத்தை மொழி பெயர்த்துள்ளார்.

சிக்காகோ பல்கலைக் கழகம் தென் ஆசிய இலக்கிய முத்திங்கள் இதழொன்றை "மாக்பில்" என்னும் பெயருடன் நடத்துகிறது. தமிழ் இலக்கியம் பற்றி ஆங்கிலத்தில் நாளது வரை வெளிவந்துள்ள எழுத்துக் களும் ஏடுகளும் குறித்து 1968-ஆம் ஆண்டில் மூன்றாம் இதழில் சூசன் நீல் அழகிய கட்டுரை எழுதியுள்ளார்" ஏல் பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்றுச் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் அங்கே மாணவர்க்குத் திருக்குறள் கற்றுத்தந்தமை குறிப்பிடத்தக்கது. "அமெரிக்க வானொலியில் தமிழ் முழக்கம் தொடர்ந்து அமையவேண்டும்" என்று அனைவரும் வலியுறுத்தி வருகின்றனர். நியூயார்க்கில் பாரதி சங்கமும் நியூயார்க்குத் தமிழ்ச் சங்கமும் செயலாற்றி வருகின்றன.

வளரும்...

வேதியற் சொற்கள் – சீர் தர ஒலி பெயர்ப்பு

அரசாணை (நிலை) எண்.70, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(M-2)த் துறை, 26.08.2011

வ.எண்	வேதியற் சொற்கள்	சீர் தர ஒலி பெயர்ப்பு
76	Bis (2-Chloromethyl)Ether	பிசு (2- குளோரோமெத்தில்) ஈத்தர்
77	Bismuth and compounds	பிசுமத்தும் அதன் சேர்மங்களும்
78	Bisphenol-A	பிசுபீனால் - ஏ
79	Bitoscanate	பைத்தோசுக்கனேட்டு
80	Boron Powder	போரான் தூள்
81	Boron trichloride	போரான் திரைக்குளோரைடு
82	Boron trifluoride	போரான் திரைப்புளூரைடு
83	Boron trifluoride comp. With methylether, 1:1	போரான் திரைப்புளூரைடு சேர்மங்கள் – மெத்தில் ஈத்தருடன், 1:1
84	Bromine	புரோமைன்
85	Bromine penta fluoride	புரோமைன் பென்.ட்டா புளூரைடு
86	Bromo chloro methane	புரோமோ குளோரோ மெத்தேன்
87	Bromodialone	புரோமோ டயலோன்
88	Butadiene	பியூட்டா-டையீன்
89	Butane	பியூட்டேன்
90	Butanone-2	பியூட்டானோன் -2

குறிஞ்சிப்பாட்டில் குலவும் மலர்கள்

அறிஞர் மருதநாயகம்

சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலோடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்து பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசை பாட, தண்தென்றல் இடைவிராய்த் தணியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண் ஒரு மாணிக்கச் செய்குன்றின் மேல், விசும்பு துடைத்து, பசும்பொன் பூத்து, வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்;

கண்டு பெரிய தோர் காதல் களிகூர்ந்து தன் செம்மலர்ச் சீறடிமேல் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலர் அணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண் மலர் கொய்தாள்; கொய்த விடத்து, மரகதமணிவிளிம்பு அடுத்த மாணிக்கச்சுனை மருங்கின தோர் மாதவி வல்மண்டபத்துப் போது வேய்ந்த பூநாறு கொழு நிழற்கீழ்க்கடிக்குருக்கத்திக் கொடி பிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடு தொடுத்து வந்து இழிதரும் அருவி, பொன் கொழித்து, மணிவரன்றி, மாணிக்கத்தோடு வயிரம் உந்தி, அணி கிளர் அருவி ஆடகப் பாறைமேல் அதிர் குரல் முரசின் கண்ணி ரட்ட, வண்டும் தேனும் யாழ்முரல, வரிக்குயில்கள் இசைபாடத் தண்தாது தவிசுபடப்போர்த்த தோர்பளிக்குப்பாறை மணித்தலத்து மிசை, நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவம் கொளவிரித்து, முளையிள ஞாயிறு இளவெயில் எறிப்ப, ஓர் இளமயில் ஆடுவது நோக்கி நின்றாள். அப்பால், தலைமகனும் பற்பல் நூறாயிரவர்கூர் வேல் இளையரொடு குளிர் மலைச்சாரல் வேட்டம் போய் விளையாடுகின்றான்.

ஆண்டு எழுந்ததோர் கடுமாவின் பின்ஓடிக் காவல் இளையரைக் கையகன்று நெடு மான் தேரொடு பாகனை நிலவு-மணல் காணியாற்று நிற்கப் பணித்துத் தொடுகழல் அடியதிரச் சுருளியருங்குஞ்சி பொன் ஞாணில் பிணித்துக் கடிகமழ் நறுங்கண்ணிமேல் கொண்டு வண்டு மணனயர, அஞ்சாந்தின் நறுநாற்றம் அதன் பொழிலிடைப் பரந்து நாற, அடுசிலையொடு கணை ஏந்தி, வடிவு கொண்ட காமன் போலச் சென்று, அவள் நின்ற இரும் பொழில் புகும். அஃது யாங்ஙனமோ எனின், வடகடலிட்ட ஒருநுகம் ஒருதுளை, தென் கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற்போலவும் வெங் கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம் கதி வழுவித் தலைப் பெய்தாற் போலவும் தலைப் பெய்து, ஒருவர் ஒருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியர் ஆவர். *(இறையனார். 32-33)*

தலைவனும் தலைவியும் தமியராகிச் சேரும் களவு நிகழ்ச்சியை வருணிக்கும் இப்பகுதியில் இருபதுக்கும் மேற்பட்ட மலர்களின் பட்டியல் உரிய இடத்தில் இடம் பெற்றிருக்கக் காணலாம். உரைநடை யானாலும் பொருத்தமான எதுகை மோனை நலன்களோடு அழகிய உவமைகள் சேர்க்கப்பட்டுத் தெரிந்தெடுத்த சொற்களின் சேர்க்கையால் கவிதையழகு பெற்று முருகியல் இன்பம்தரும் சிறப்பு இதற்கு உண்டு. இது குறிஞ்சிப்பாட்டு நிகழ்ச்சியையும் நினைவூட்டுமாறு அதன் உரைநடைச் சுருக்கமாக அமைந்துள்ளது.

தனி மலர்களின் வடிவம், வண்ணம், மணம் ஆகியவற்றை உள்ளவாறு வருணிப்பதிலும் பலவகை மலர்களைப் பொருத்தமான குறியீடுகளாகப் பயன்படுத்திக் கொள்வதிலும் சங்கச் சான்றோர் போற்றுதற்குரியோர். இம்மரபின் வழிவந்து அம்மரபிற்குப் பெரும் பங்களிப்பும் செய்துள்ளவர் கபிலர். அதற்கு அழியாப் பெருஞ் சான்றாக அவருடைய குறிஞ்சிப்பாட்டின் மலர்ப்பகுதி அமைந்துள்ளது.

வளரும்...

உலகத்தமிழுக்கு வரப்பெற்ற கருத்துரைகள்

அருமை
திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

நன்று
வழக்கறிஞர், சிவக்குமார்.

வாழ்த்துகள்
திரு.ஜெயச்சந்திரன், தினமணி நாளிதழ்.

எட்டு எட்டா இலக்கல்ல எட்டட்டும் எண்ணாயிரம் !! புகழ் மணக்கட்டும் ! வாழ்த்துக்கள்
வழக்கறிஞர், சிவக்குமார்.
திரு.சக்கரவர்த்தி, ரோட்டரி சுழல் சங்கம்.

எல்லா இதழ்களிலும் கமழும்
ஈடில்லா தமிழ் மணம்.
எட்டு இதழ்களும் தமிழரியா என்போன்றோர்க்கு எட்டும்
இதழ். தமிழ் பறை கொட்டும்
இதழ்.நீ என்றும் வருக.தனி
தமிழ்த்தேன் தருக.

சார் தங்களின் பிரெஞ்சு
அரண்மனை தொடர் இந்த
வாரம் ஒரு த்ரெல்லர் தொடர்
போல அமைந்துள்ளது.எப்படி
என்றால்,தானம் தருவதாக
உங்கள் தொடர் வளர,,அடுத்து
கீழே படித்தால் 'ஏற்பது இகழ்ச்சி' என்றுள்ளது.இரந்த
தை ஏற்றார்களா?சஸ்பென்ஸ்
தாங்கவில்லை.ஒன்பான் இதழை உடனே வெளியிடுக
படிக்கதுடிக்கும் தாமதித்தால்
தலை வெடிக்கும்.

திரு.சீனிவாசன்.

நன்றி ஐயா
பேராசிரியர் விஷ்ணுகுமரன், திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரப்பிரதேசம்.

அருமை
திரு.சுப்பிரமணி, தேனி.

நாவலர் ச. சோமசுந்தரனார் நடையில் எழுதுவது மிக்க மகிழ்ச்சி.
பேராசிரியர் தாமரைக்கண்ணன்,
மாநிலக்கல்லூரி.

இல்ல முகவரியில் உலகத்தமிழ் பெற இயலுமா..
திரு.விஜயகிருஷ்ணன், செய்தி வாசிப்பாளர், பொதிகை தொலைக்காட்சி.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மெருகேறி வரும் உலகத் தமிழ்... இது உலகத் தமிழர்களின் கொடை.... வாழ்த்துக்கள் ஔவை அருள் ஐயா....
கவிஞர் பேரா, நெல்லை.

வாழ்க தமிழ்
திருமதி அம்பாள் அடியாள், ஜெர்மனி.

மிகவும் அருமை இனிமை. அருமை
திரு.பால சாண்டில்யன்.

ஆத்தி சூடி கன்னடத்தில் ಆತ್ತಿಚೂಡಿ
திரு.ரவீந்திர ராஜ்.

மிக்க நன்றி . படித்துப் பார்க்கிறேன்
புலவர் விஜயலட்சுமி

நல்ல பதிவுகள் அருள்..... சிறப்பு....!
திரு.த.இராமலிங்கம், வழக்கறிஞர்

வாழ்த்துகள்
திருமதி.ரூபி, மொழிபெயர்ப்பாளர்.

எட்டுத்திசையும் பரவட்டும்
திருமதி.ஜான்சிராணி, உலகத்தமிழ்ச் சங்கம், மதுரை

வேதியியல் பகுதி -
73,74 இரண்டிலும் மொழிபெயர்ப்புப் பிழை உள்ளன.
மெய்ஞானி பிரபாகர் பாபு

அருமை
திரு.சிவக்குமார்.

வள்ளுவர் காவில இல்லாட்டாலும், நம்ம ஔவை, பளீரென்ற விபூதியும், உத்திராட்சமுமாய் இருக்கிறாள். மகிழ்ச்சி..
தயவு செய்து இவர்கள் இப்படியே இருக்கட்டும்.
திரு.சதீஷ், வழக்கறிஞர்.

நன்றி ஐயா.
திரு.வெற்றிவேல், மொழிபெயர்ப்பாளர்,
உயர்நீதிமன்றம், சென்னை.

உலகத்தமிழுக்கு வரப்பெற்ற கருத்துரைகள்

நன்றி.
திரு.ரமேஷ்.

உலகத்தமிழ் இதழை தொடர்ந்து படிப்பவர்களில் நானும் ஒருவன்.
இன்றைய (29.1.2020) இதழையும். வழக்கம்போல் படித்துவரும்போது ஆசிரியர் பக்கத்தில் என்னைப்பற்றியும் நான் நடத்தும் திசைஎட்டும் இதழைப்பற்றியும் பதிவு செய்திருந்ததை படித்தபோது மிகவும் மனம் மகிழ்ந்தேன். இந்த எளியோனையும் அடையாளம் கண்டு உலகத்தமிழில் பதிவிட்டமைக்கு மிகமிக நன்றி.
அன்பன்,
குறிஞ்சிவேலன்,
திசையெட்டும் ஆசிரியர்.
கடலூர்.

Dear Dr Arul, I went through all numbers of Ulagat-thamizh hitherto.
I am immensely happy. In respect of Chemical names of compounds, can we hope to evolve and insert suitable diacritical marks in Tamil Spelling and tabulate these marks with phonetic transcription in English to help the learners fine-tune the approximate sounds as heard in the world of chemistry! Better it would be for subtle differentiation of compound names almost sounding

நன்றி. வணக்கம்.
திரு.பொன் சின்னதம்பி முருகேசன்,
மொழிபெயர்ப்பாளர், திண்டுக்கல்.

நன்றி. மகிழ்ச்சி.
திரு.சிவா பிள்ளை, இங்கிலாந்து.

சிறப்பு. ஐயா. வாழ்த்துகள்.
முனைவர் துரை மணிகண்டன், திருச்சி.

அருமை!
பிரெஞ்சு கலைக்கழகம் பற்றிய தகவல்கள் நன்றாக இருந்தன.
நீங்கள் தான் 'உலகதமிழ்' பத்திரிகை க்கு ஆசிரியரா?
திருமதி.தெய்வநாயகம், அமெரிக்கா.

அருமை.
திரு.சுந்தர், இங்கிலாந்து.

மிகவும் நன்று. வாழ்த்துகள்
முனைவர் பசும்பொன், மதுரை.

ஊருக்கு நல்லது சொல்வேன்
எனக்கு உண்மை தெரிந்தது
சொல்வேன்

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்

05.02.2020



திருப்பூர்
தமிழ்ச் சங்கம்

27வது ஆண்டு விழா

மற்றும்

"இலக்கிய விருதுகள் - 2018"
பரிசளிப்பு விழா
அழைப்பிதழ்

நாள் : 05-02-2020 புதன்கிழமை
நேரம் : மாலை 6.30 மணி
இடம் : புத்தகக் கண்காட்சி அரங்கம்
KRC சிட்டி சென்டர்
(டைமண்ட் தியேட்டர் எதிரில்)
திருப்பூர் - 641 604

திருப்பூர் தமிழ்ச் சங்கம்
34, கே.பி.என். காலனி, 3-வது வீதி,
திருப்பூர் - 641 601.
செல்: 98430 60666, 94426 10326
E-mail : a.muruganathan@gmail.com

திருப்பூர் தமிழ்ச் சங்கம்
27வது ஆண்டு விழா
மற்றும்
"இலக்கிய விருதுகள் - 2018"
பரிசளிப்பு விழா

சிறப்பு விருந்தினர்
முனைவர்
திரு. ப. அன்புச்செழியன் M.A., M.Phil., B.Ed., Ph.D., அவர்கள்
இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம்,
மதுரை.

நடுவர் பெருமக்கள்
திரு. புதுகை. மு. தருமராஜன் அவர்கள்,
(ஆசிரியர், புதுகைத் தென்றல்)

திரு. கவிஞர். விஜயகிருஷ்ணன் அவர்கள்,
(செம்தி வாசிப்பாளர், பொதிகை தொலைக்காட்சி)

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்த்தாய் 72–தமிழாய்வுப் பெருவிழா

05.02.2020 மற்றும் 06.02.2020 —பன்னாட்டுக் கருத்தரங்கம்

07.02.2020—இதழாளர் ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
07.02.2020—சு.அறிவுக்கரசு—இரஞ்சிதம் அறக்கட்டளைச் சொற்பொழிவு

07.02.2020—தெ.பொ.மீ. அறக்கட்டளைச் சொற்பொழிவு
08.02.2020—சன்மார்க்கச் செம்பொருட்டுணிவு உயராய்வு இருக்கை சிறப்புச் சைவ சித்தாந்த கருத்தரங்கம்
09.02.2020—அகத்தியர் ஆய்விருக்கை
09.02.2020—பன்னாட்டுத் தமிழ்க் கவிஞர்கள் மாநாடு
10.02.2020—பன்னாட்டுக் கருத்தரங்கம்.
11.02.2020—தினமணி அறக்கட்டளைச் சொற்பொழிவு,
11.02.2020—பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளைச் சொற்பொழிவு
11.02.2020—கலாநிலையம் டி.என்.சேசாச்சலம் அறக்கட்டளைச் சொற்பொழிவு
12.02.2020—பெரியார் ஈ.வெ.ரா.நாகம்மை அறக்கட்டளைச் சொற்பொழிவு
12.02.2020—முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அறக்கட்டளைச் சொற்பொழிவு

14 ஆவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு!

புதுவைப்பல்கலைக் கழகம்
பிப்ரவரி 6,7 தேதிகளில் நடைபெறுகிறது.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்

08.02.2020

08.02.2020

08.02.2020



08.02.2020



செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்

09.02.2020

09.02.2020

11.02.2020